1987 ஏப்ரல் 29] [திரு. க. இராசாராம்]

அவர்களைப் பொறுத்தவரையில் ஏதாவது ஆதாரம் கிடைக்கிறதா என்பதைத்தான் பார்ப்பார்களே தவிர, இன்ஜின்களைப் பார்ப்பதில்லை. அங்கே இன்ஜினியர்கள் வரவில்லை. ஆகவே தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாக மத்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதினார்கள். இங்கே இருக்கின்ற நிறுவனம் இங்கிலாந்து நாட்டினுடைய கூட்டுறவோடு நடக்கக்கூடிய நிறுவனமாக அது இருக்கிறது. ஆகவே, இங்கிலாந்து நாட்டுத் தூதரும் கடிதம் எழுதினார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசு கொஞ்சம் கீழே இறங்கி வந்து, அவர்களுடைய கொள்கைகளை எல்லாம் மாற்றிக் கொண்டு மெக்கானிக்கல் இன்ஜினியர்களை அனுப்பி பரிசோதிக்க ஏற்பாடு செய்தது; பரிசோதித்தும் ஆகிவிட்டது. அதற்குள்ளாக அந்த நிறுவனத்தை நடத்துவதற்கு அங்கே இருக்கின்ற எல்லா தொழிலாளர்களும் தங்களுடைய சம்பளத்தைக் கொடுத்து, நிறுவனத்தைக் காப்பாற்ற முன்வந்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரியாக இது நடந்திருக்கிறது. இதைப் பார்த்தவுடன் மையப் பேரரசும் இதற்கான சலுகைகளை அளிக்க ஆரம்பித்து இருக்கிறது. எனவே மீண்டும் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டு வருகிறது.

(உ) கன்னியாகுமரி மாவட்ட சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவருக்குப் பதிலாக திரு. வை. பாலச்சந்திரன் அவர்கள் அதனை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வை. பாலச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பது சம்பந்தமாக அவர்கள் மனு செய்தும் உதவித் தொகை கிடைக்காமல் ஆயிரத்துக்கும் அதிகமானோர் குமரி மாவட்டத்தில் மட்டும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1987 ஏப்ரல் 29

* மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

60 வயதுக்கு மேற்பட்ட பதிவு பெற்ற சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசாணை எண் 95, இந்திய மருத்துவத் துறை, நாள் 16—7—1986 மற்றும் அரசாணை எண் 121, இந்திய மருத்துவத்துறை, நாள் 14—9—1986-ல் அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி மாவட்டங்களில் வருவாய் கோட்ட அலுவலர்களுக்கும், சென்னையில் ஆட்சியாளரின் நேர்முக உதவியாளருக்கும் ஓய்வூதியம் வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2. ஓய்வூதிய விண்ணப்பதாரர் வசிக்கும் கிராமத்தினை நிர்வகிக்கும் தாசில்தார், விண்ணப்பதாரரை விசாரித்து விசாரணை அறிக்கை மற்றும் விண்ணப்பதாரரின் சான்றிதழ் பதிவு சம்பந்தமான சரி நிலையை தமிழ்நாடு இந்திய மருத்துவக் கழகப் பதிவாளரிடம் பெற்று வருவாய் கோட்ட அலுவலருக்கு (சென்னையில் ஆட்சியாளரின் நேர்முக உதவியாளருக்கு) அனுப்புதல் வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு வருவாய் கோட்ட அலுவலர் ஓய்வூதிய ஆணை வழங்குவார்.

3. அதன்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோட்டாட்சியாளர்களிடமிருந்து கீழ்க்கண்ட தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

சித்த மருத்துவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை—64.

தள்ளுபடி செய்யப்பட்டவை—11.

ஓய்வூதியம் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டவை—1.

விசாரணை நிலையில் உள்ளவை—52.

சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது கோட்டாட்சியாளரின் நேரடி நிர்வாக வரம்புக்குள் இருப்பினும், சித்த மருத்துவர்களுக்கு வழங்கும் ஓய்வூதியம் குறித்தான முன்னேற்றம், சீரான முறையில் மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மூலமாக தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.